IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.653 /2009

Deposition of witness for PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : அம்பிகா கண்ணன் | Caste | : - |
| Father's Name | : கிருஷ்ணாரெட்டி | Calling | : - |
| Village | : - | Religion | : - |
| Town | : - | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5 day of March, 2021.

Chief Examination

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2-வது சாட்சியாவேன். என்னை வாதி தரப்பில் 2வது சாட்சியாக முதல் விசாரணை செய்து எனது தரப்பு நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். எனது தரப்பு ஆவணங்களை இன்று குறியீடு செய்கிறேன். எனது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது சா.சா.ஆ1 ஆகும். எனது குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது சா.சா.ஆ2 ஆகும். எனது ஆதார்அட்டையின் நகர் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது சா.சா.ஆ3 ஆகும். எனது தரப்பு முதல் விசாரணை வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அதனை நான் கொண்டுவரவில்லை. சாட்சி தற்பொழுது எனக்கு அழைப்பாணை வரவில்லை என்று கூறுகிறார். என்னை சாட்சி சொல்ல வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது கண்டிப்பேடு ஆகும். என்னை திருமணம் செய்து ஆற்காடு அருகில் உள்ள பெருமான் தாங்கல் ஆகும். எனக்கு 1982ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு பெருமான்தாங்கலில் சொத்துக்கள் உள்ளது. கண்டிப்பபேடுலிம் சொத்து உள்ளது. கண்டிப்பேடு மற்றும் பெருமான்தாங்கலில் உள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது.

நான் 7 வருடமாக பெருமான்தாங்கலில் வசித்து வந்தேன். தற்பொழுது கண்டிப்பேடில் வசித்து வருகிறேன். தற்பொழுது எனது பிள்ளைகளின் படிப்பிற்காக கண்டிப்பேடில் வசித்து வருகிறேன். பெருமான்தாங்கள் கிராமத்திற்கு தற்பொழுது போவதில்லை என்றால் அவ்வப்பொழுது சென்று வருவேன். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது அதன் விஸ்தீரணமும் எனக்கு தெரியாது. வாதிகள் சொத்துப்பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் வழக்கு தொடர்ந்த விவரம் எனக்கு தெரியாது. எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. வாதிகளுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். வாதிகளின் சொத்து விவரம் தெரியாது அதன் விஸ்தீரணம் தெரியாது என்றால் சரிதான். யார் மூலமாக வாதிகளுக்கு சொத்து வந்தது என்று எனக்கு தெரியாது. வாதிகள் சொன்ன விவரத்தை டைப்செய்து நான் கையெழுத்து செய்தேன் என்றால் விவரங்களை நான் சொல்லி டைப்செய்தேன். டைப்செய்து கொடுத்த நிரூபணவாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேன். யார் டைப்செய்தது என்று எனக்கு தெரியாது. என்றைய தேதியில் டைப்செய்யப்பட்டது என்றால் 3 நாட்களுக்கு முன்பு டைப்செய்யப்பட்டதாக இருக்கும். என்னை அழைத்து வந்தவர்கள் சொத்திற்கு உரிமையானவர்கள் அழைத்து வந்தார்கள். அதற்கான ஆவணங்களை என்னிடம் காட்டினார்கள். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இந்த வழக்குபற்றிய எந்த விவரங்கள் எதுவும் தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதிற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனலட்சுமி, ஜெயம்மா மற்றும் சந்திரம்மா ஆகியோர்கள் வழக்கிட்டுள்ளார்கள். கேசவரெட்டி மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். கேசவரெட்டி மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பழைய ஆவணங்களை தாக்கல் செய்து வாதிக்கு ஆதரவாக சாட்சிய சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.